# IWMA ACTIVITIES IN NEWS ARTCLES

# *Article Published on 28th October, 2014 @ The New Indian Express, Chennai Edition (City Express Page 2)*

## Green Diwali Goes 'Waste' With 27 Tons of Remnants

**Volume of firecracker waste more than half of last year's, says IWMA, an NGO, which collected 27.681 tons this year from the city and disposed it of at the hazardous waste treatment storage facility in Gummidipoondi**



P RAVIKUMAR

**by Archita Suryanarayanan**

**Chennai:** The rain didn't seem to have entirely dampened the festivities in the city as over 27 tons of waste from crackers — 17 tons more than that of the previous year — was sent to the Common Hazardous Waste Treatment Storage and Disposal Facility (CHWTSDF) in Gummidipoondi.

Disposal of hazardous wastes from firecrackers was taken up by Industrial Waste Management Association (IWMA), a non-government organisation formed on the directive of the Tamil Nadu Pollution Control Board (TNPCB), which campaigned for a 'Green Deepavali' involving safe disposal of hazardous wastes, along with the Chennai Corporation.

"Last year, we disposed of 10 tons of waste. This year, we introduced the 'Green Deepavali' concept and expected the waste to be lesser. But the total waste collected and disposed of so far has been 27.681 tons. These were taken to Gummidipoondi on 20 specialised trucks for hazardous material provided by the Corporation," said Shankar Konjeevaram, the project coordinator for Green Deepavali from IWMA.

> *Residents were urged to clear the areas outside their homes by themselves, but many people left the wastes on the road for the conservancy workers to clean*

The waste has to be taken to the CHWTSDF, which is the only facility available in Tamil Nadu for safe disposal of hazardous waste. The correct disposal of hazardous waste has been a cause for concern in India, and the plant in Chennai has one of the 25 Common Hazardous Waste Treatment, Storage and Disposal Facilities (TSDF) in the country. Although environmentalists stress the importance of this facility in every area, several States and even the city of Delhi does not have the facility.

"Disposal of hazardous waste has to be scientific. The wastes could seep into ground water and affect drinking water. Animals could come in contact with the waste and get poisoned," Shankar said.

As part of precautionary measures, Chennai Corporation workers and residents had been instructed on correct disposal of crackers and source segregation from municipal waste, and the IWCA and Corporation made attempts to sensitise people on collecting and segregating the remnants.

Residents were urged to clear the areas outside their homes by themselves, but most people ended up leaving the wastes on the road for the workers to clean. The rain added to the woes, making sweeping all the more tedious as the workers had to separate the firecracker waste from the water manually. "More Corporation vehicles are expected to clear the remaining waste," Shankar added.

# Article at The New Indian Express – 12th Nov, 2014 (Online)

THE NEW INDIAN EXPRESS








## E-Waste: A Goldmine of Resources Getting Lost Forever

By Archita Suryanarayanan | Published: 12th November 2014 06:02 AM
Last Updated: 12th November 2014 01:45 PM

Tweet | Like 20 | g+1 2 | Email 19



CHENNAI: The magnitude of e-waste generated today is phenomenal. The magnitude that can be extracted from and reused is also surprising. There is more gold in a tonne of e-waste than in an ore of gold.

India with its embracement of technology has become a huge generator of e-waste. “We have come from 150,000 tonnes of e-waste in India in 2006 to 800,000 in 2012-13, growing at more than 100 per cent a year,” says Rathinam T, vice-president of Tes-Amm India, a prominent e-waste recycling company.

Young Indians, a not-for-profit organisation, an initiative of the Confederation of Indian Industries, along with Tes-Amm and Industrial Waste Management Association (IWMA) is working on a campaign to spread awareness about e-waste with schools as the starting point. “Through this campaign, every school can become a collection point, with an e-waste drop box,” says Ravi Senthilkumar, who is on the environment chair of Young Indians.

S Mani, chairman of IWMA, says, “The backend of chemistry is waste management. No part that goes into the making of electronics can be ‘grown’. They are all materials that are scarce. So it’s better to recover it before it goes into the dustbin,” he says.

“Take good care of products, and they do not have to be repaired often. If we rush to get a new phone every time the old one shows problems, we are generating more and more e-waste,” says Mani, adding that everyone is part of this cycle, right from the cell phone salesman who advises you to buy a new phone as the repair will cost almost as much.

“We can minimise the usage of electronics, progressively. For instance, we can set aside a few hours to not use our cellphones,” he says, citing an instance where he was talking to students to see who had the oldest phone. “One boy had a seven-year-old phone and I congratulated him. That was probably the first time he was proud of owning that phone!”

The e-waste campaign began its pilot project last year with four Chennai schools, and plans to expand this year to 100 schools.“The general public may not take things seriously, but people listen when children talk,” he says.

Students are encouraged to spread the message to their neighbours and parents, and collect e-waste. “Last year, we received around 500 kg of e-waste from one school alone,” Ravi says.

Although there is an existing law on e-waste (management and handing) that came into force in 2012, the implementation is yet to catch on. “Government collection centres in every area should be introduced to make people drop off their waste every month,” says Rathinam.

“Around 30-40 metals, rare earth, plastic and steel are present in one cellphone.” says Mani, “Once dumped, they are lost forever.”

# Article at The New Indian Express – 12th Nov, 2014 (City Express page 3)

by Archita Suryanarayanan



**Chennai:** By embracing technology, India has only become a massive generator of e-waste.

"We have come from 1,50,000 tons of e-waste in 2006 to 8,00,000 in 2012-13. We are growing at more than 100 per cent a year," says Rathinam T, vice president, Tes-AMM India, an e-waste recycling company.

The hazardous effect of e-waste can find its way into a mother's milk. When it is illegally disposed in water, the chemicals get mixed with groundwater, which is consumed by animals and humans. "These hazards have not gained as much attention as required in India," adds Rathinam.

Although there is an existing law on e-waste (management and handing) that came into force in 2012, the implementation is yet to catch on. "Government collection centres should be introduced in different areas and people should be asked to drop the e-waste there every month," says Rathinam.

Young Indians, a not-for-profit organisation, which is an initiative of the Confederation of Indian Industries along with Tes-AMM and Industrial Waste Management Association (IWMA), is organising a campaign to spread awareness about e-waste, with schools as the starting point. "Through this campaign, every school can become a collection point, with an e-waste drop box," says Ravi Senthilkumar, environment chair, Young Indians.

*We have come from 1,50,000 tons of e-waste in 2006 to 8,00,000 in 2012-13. We are growing at more than 100 per cent a year*

**— Rathinam T**
Vice President, Tes-AMM India

On the other hand, S Mani, chairman, IWMA, says that while reuse should be encouraged, it is also necessary to track the lifecycle of an electronic product at the manufacturing stage. "The back-end of all chemistry is waste management. No parts that go into the making of electronics can be 'grown'. They are all materials which are scarce," he says. "We can minimise usage of electronics progressively. For instance, we can set aside a few hours where we do not touch our cellphone," he adds.

There are plans to expand the e-waste campaign, which began its pilot project last year with four Chennai schools, to 100 schools. "The general public may not take things seriously, but people listen when kids talk," says Ravi. "Students are encouraged to spread the message to their neighbours and parents, and collect e-waste. Last year, we got around 500 kg of e-waste from one school alone," he adds.

# Article at Thinamani on 21st Nov, 2014

## பேராபத்தை ஏற்படுத்தும்

# மின்னணு சாதனக் கழிவுகள்

### தமிழகம் 2-ஆவது இடம்

கடந்த 2014-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புள்ளி விவரத்தின்படி, 2013-14 ஆம் ஆண்டில் இந்தியாவில் 5 லட்சம் டன் முதல் 6 லட்சம் டன் வரை மின்னணு சாதனக் கழிவுகள் உருவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், மாநிலங்களைப் பொருத்தவரை 10 மாநிலங்கள் 70 சதவீத மின்னணு சாதனக் கழிவுகளையும், அவற்றிலுள்ள 65 பெரு நகரங்கள் 60 சதவீதக் கழிவுகளையும் உருவாக்குகின்றன.

மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் 2-ஆவது இடத்தில் உள்ளது.

மின்னணு சாதனக் கழிவுகளை அதிக அளவில் உருவாக்கும் முதல் 10 பெரு நகரங்களின் பட்டியலில் முதலிடத்தில் மும்பையும், அடுத்ததாக தில்லி, பெங்களூரு நகரங்களும் 4-ஆவது இடத்தில் சென்னையும் இடம்பெற்றுள்ளன என்கிறது புள்ளிவிவரம்.



காய்கறிக் கடை போல் நடைபாதையில் குவிக்கப்பட்டுள்ள மின்னணு சாதனக் கழிவுகள்.

### அனுமதி பெறாத மறுசுழற்சியாளர்கள்

பயன்படுத்த முடியாத நிலைக்குச் செல்லும் மின்னணு சாதனக் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்துவது அவசியம். ஏனெனில், கணினிகள், மடிக் கணினிகள், கைப்பேசி போன்ற மின்னணு சாதனப் பொருள்கள் செராமிக், சிலிகான் போன்ற கடினப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. இவற்றில் பேட்டரிகள், டயோடு போன்ற பொருள்கள் இடம்பெற்றிருக்கும்.

எனவே, இந்தக் கழிவுகளில் மீண்டும் பயன்படுத்தப்படக் கூடிய சிறு பொருள்கள் எடுத்துக்கொள்ளப்பட்டபின், மீதமுள்ள பொருள்கள் பாதுகாப்பாக மறுசுழற்சி செய்யப்பட்டு வேறு பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் இந்தப் பணிகள் முறையாக செய்யப்படுகின்றன. ஆனால், இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் இந்தப் பணிகள் முறையாகச் செய்யப்படுவதில்லை. அனுமதி பெறாத மறுசுழற்சியாளர்கள் அதிக எண்ணிக்கையில் இங்கிருப்பதே அதற்குக் காரணம்.

இவர்கள், இந்தக் கழிவுகளிலிருந்து தங்களுக்குத் தேவையான தங்கம், வெள்ளி, செம்பு போன்ற பொருள்களை எடுத்துக் கொண்டு எஞ்சும் கடினப் பொருள்களை சாதாரண வீட்டுக் குப்பைகளோடும், ஆறுகளிலும் தூக்கி வீசிவிடுகின்றனர்.

எனவே, தூய்மை இந்தியா திட்டத்தை அறிமுகம் செய்திருக்கும் இந்திய அரசு, ஆபத்தை உணர்ந்து மின்னணு சாதனக் கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

எம். மார்க் நெல்சன்

**சென்னை, நவ. 20:** பேராபத்தை ஏற்படுத்தும் மின்னணு சாதனக் கழிவுகள் (இ-வேஸ்ட்) குறித்த எள்ளளவு விழிப்புணர்வுகூட இந்திய மக்களிடையே இன்னும் ஏற்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர் நிபுணர்கள்.

இந்தக் கழிவுகளின் தொடர் பாதிப்புகள் காரணமாக கருச்சிதைவு, குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சிக் குறைபாடு, புற்றுநோய் போன்ற பேராபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

வேகமான தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கம், எங்கும் கணினி, அனைவரது கைகளிலும் கைப்பேசி என்ற நிலையைத் தாண்டி 'ஸ்மார்ட் ஃபோன்', 'டேப்லெட்' என்ற நிலையை உருவாக்கி வருகிறது. அது போதாதென்று, அரசுத் திட்டங்களின் காரணமாக அனைவரது வீடுகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி என்ற நிலை மாறி, அனைவரது வீட்டிலும் லேப்டாப் என்ற நிலையும் உருவாகி வருகிறது.

உலகிலேயே அதிக அளவு கைப்பேசிகள் பயன்பாடு உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. சீனா முதலிடத்தில் உள்ளது. அடுத்த 5 அல்லது 10 ஆண்டுகளில் இந்தியா முதலிடத்துக்கு வந்துவிடும் என்கின்றது புள்ளி விவரம்.

அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விவரப்படி 134 கோடியே 95 லட்சத்து 85 ஆயிரத்து 838 மக்கள் தொகையைக் கொண்ட சீனாவில் 122 கோடியே 73 லட்சத்து, 60 ஆயிரம் பேர் கைப்பேசி வைத்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக 126 கோடியே 20 லட்சத்து 90 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்தியாவில் 92 கோடியே 43 லட்சத்து 187 ஆயிரத்து 927 பேர் கைப்பேசி வைத்துள்ளனர்.

மூன்றாவது இடத்தில் அமெரிக்கா, அடுத்ததாக பிரேசில், ஐந்தாவது இடத்தில் ரஷியா ஆகியவை உள்ளன.

இவ்வாறு கைப்பேசிகளையும், பிற மின்னணு சாதனப் பொருள்களையும் பயன்படுத்துபவர்களில் பெரும்பாலானோர் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய பொருள்கள் சந்தையில் அறிமுகமாகின்றபோது, பழையவற்றை தூக்கி எறிந்துவிட்டு புதியதை வாங்குவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக, ஆண்டுக்கு ஆண்டு பல லட்சம் டன் மின்னணு சாதனக் கழிவுகள் இந்தியாவில் உருவாவதோடு, பிற நாடுகளின் மின்னணு சாதனங்களின் கழிவுகளும் இந்தியாவில் கொட்டப்படுவதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சியாளரும், தொழில் நிறுவன கழிவு மேலாண்மை சங்க நிர்வாகியுமான சங்கர் காங்கிவரம் கூறியது:

கணினிகள், மடிக் கணினிகள், கைப்பேசிகள், தொலைபேசிகள், சிடி பிளேயர், பிரின்ட்டர்கள், மின்னணு பொம்மைகள், கேமராக்கள், மைக்ரோவேவ் அடுப்பு ஆகியவைதான் பேராபத்தை ஏற்படுத்தும் மின்னணு சாதனக் கழிவுகள் பட்டியலில் இடம்பெறுகின்றன.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் இந்த மின்னணு சாதனக் கழிவுகள் மக்களுக்கு பாதிப்பின்றி அப்புறப்படுத்துவது முறையாக பின்பற்றப்படுகின்றன. அதாவது, அந்தப் பொருள்களை தயாரித்து வழங்கும் நிறுவனங்களே, பொருள்கள் பயன்படா நிலையை எட்டும்போது திரும்பப் பெற்றுக்கொள்கின்றன. இதற்காக பொருள்களின் பின்பக்கத்தில் அதற்கான அறிவிப்பையும், தொடர்பு எண்ணையும் குறிப்பிடுகின்றன.

ஆனால், இந்தியாவில் மின்னணு சாதனப் பொருள்களைத் தயாரித்து வழங்கும் நிறுவனங்கள் அக்கழிவுகளை திரும்பப் பெறுவதில்லை.

இதனால், ஆயிரக்கணக்கான டன் மின்னணு சாதனக் கழிவுகள் இந்தியாவில் குவிந்து கிடக்கின்றன.

அதுமட்டுமன்றி, இந்தியாவில் மின்னணு மறுசுழற்சி நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் வளர்ந்த நாடுகள் பல ஆயிரம் டன் மின்னணு சாதனக் கழிவுகளை இந்தியாவில் கொட்டி வருகின்றன.

இதை அறிந்து விழித்துக்கொண்ட இந்திய அரசு, மின்னணு சாதனக் கழிவு மேலாண்மை, கையாளுதல் சட்டத்தை கடந்த 2011-இல் வடிவமைத்து 2012 மே மாதத்தில் நடைமுறைக்கு கொண்டுவந்தது.

ஆனால், 2014-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையின்படி 2013-14-ஆம் ஆண்டில் இந்தியாவில் 5 லட்சம் டன் முதல் 6 லட்சம் டன் மின்னணு சாதனக் கழிவுகள் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதிக அளவில் இயங்கி வரும் அனுமதி பெறாத மறுசுழற்சியாளர்கள் மின்னணு சாதனக் கழிவுகளை முறையாகக் கையாளுவதில்லை. எனவே, அறிமுகம் செய்துள்ள சட்டத்தை மேலும் வலுவானதாக மாற்ற வேண்டும் என்பதே நிபுணர்களின் கருத்து என்றார்.

# News article published in Thinamani news paper Nov 22nd, 2014

# நானோ தொழில்நுட்பம் மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தவிர்க்கலாம்

**சென்னை,நவ.22:** நானோ தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில், பல்வேறு வேதியியல் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதாக எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக இயக்குநர் சி.முத்தமிழ்ச்செல்வன் கூறினார்.

சென்னை வடபழனி எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக வேதியியல் துறை சார்பில் சுற்றுச்சூழல், வேதியியல் துறையில் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் கருத்தரங்கை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் ஏ.பி.மண்டல் தொடங்கி வைத்தார்.

இதில், எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழக இயக்குநர் சி.முத்தமிழ்ச்செல்வன் பேசியது:

இன்றைய நகர வாழ்க்கையில் இயற்கையான காற்றை சுவாசிப்பது என்பது இயலாத ஒன்றாக உள்ளது. இதற்கு நாம் சுற்றுச்சூழலை மாசுபடுத்தி வருவது முக்கியக் காரணமாகும். தற்போது நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில், பல்வேறு வேதியியல் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. இதை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.




சென்னை வடபழனி எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில், மறுசுழற்சி செய்ய மின்னணுக் கழிவுகளை சேகரிக்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் ஏ.பி.மண்டல் (இடமிருந்து 4-ஆவது). உடன், எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக பேராசிரியர் வி.கே.இந்திரா பிரியதர்ஷினி, தொழில்சாலை கழிவு மேலாண்மை அமைப்பின் தலைவர் எஸ்.மணி, பாபா அணு ஆராய்ச்சி நிலைய முதுநிலை விஞ்ஞானி டேனியல் செல்லப்பா, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக இயக்குநர் சி.முத்தமிழ்ச்செல்வன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய இயக்குநர் (ஆய்வகம்) கே.ரங்கநாதன் உள்ளிட்டோர்.

விஞ்ஞானி ஜே.டேனியல் செல்லப்பா பேசியது:

காகிதங்கள், காய்கறி, உணவு, மின்னணுக் கழிவுகள் உள்ளிட்டவை ஒரே குப்பைத் தொட்டியில் போடப்படுகிறது. இவை அனைத்தும் பயன்படாமல் போவதில்லை. இவற்றை தனித்தனியே பிரித்து, வெவ்வேறு குப்பைத் தொட்டிகளில் போடுவதன் மூலம் எரிவாயு, இயற்கை உரம் ஆகியவற்றைப் பெற முடியும்.

சென்னையில் மட்டும் நாளொன்றுக்கு சுமார் 4,000 டன்களுக்கு மேல் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. குப்பைகளைத் தனித்தனியே பிரிக்காமல், ஒட்டு மொத்தமாக குப்பைத் தொட்டிகளில் போடுவதால் அவற்றைப் பிரிப்பது கடினமான பணியாக உள்ளது.

முழுமையான திடக் கழிவு மேலாண்மை நடைபெற வேண்டுமானால் 100 சதவீத மறுசுழற்சி என்பது நடைபெற வேண்டும். இதற்கு குப்பைகளை குப்பைகளாகப் பார்க்கும் மனநிலையிலிருந்து மக்கள் மாற வேண்டும்.

மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் சுய உதவிக் குழுக்கள் மூலம் குப்பைகளைச் சேகரித்து அதன் மூலம் வருமானம் ஈட்டுகின்றனர். 1 டன் மக்கும் குப்பை மூலம் சுமார் ரூ.4,000 வரை வருமானம் கிடைக்கிறது. குப்பைகள் சேகரிப்பை முறைப்படுத்தினால், அதன் மூலம் பரவும் நோய்கள் தடுக்கப்படுவதோடு சுற்றுச்சூழலும் காக்கப்படும் என்றார்.

வடபழனி எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக வேதியியல் துறை பேராசிரியர் வி.கே.இந்திரா பிரியதர்ஷினி கூறியது:

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் கைப்பேசி உள்ளிட்ட மின்னணு சாதனங்களை குறைந்த கால அளவில் மாற்றும் போக்கு அதிகரித்து வருகிறது. மின்னணு சாதனங்களை அதன் குறிப்பிட்ட ஆயுள் காலம் வரை பயன்படுத்துவது அவசியம்.

இதன் மூலம் மின்னணுக் கழிவுகள் பெருகுவது குறையும். மேலும், மின்னணுக் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வரும் 28-ஆம் தேதி எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான பயிலரங்கம் நடைபெறுகிறது.

இதற்காக மொத்தம் 100 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களில், பள்ளிக்கு 10 மாணவர்கள் வீதம் தேர்ந்தெடுத்து பயிற்சி அளிக்க உள்ளோம் என்றார்.

# Article at The New Indian Express – 26th Nov, 2014

## Discussing Growth in Chemistry



**Chennai:** Faculty from the Department of Chemistry, and Engineering and Technology (E&T), SRM University, Vadapalani, in association with Institute of Research and Development (IRD) and Central Leather Research Institute (CLRI), organised a national conference on Recent Advances in Chemistry and Environment (RACE), recently. The objective of the event was to provide an opportunity to enhance collaborative research globally. The conference saw over 150 participants from educational institutions, research organisations and universities across Tamil Nadu, Puducherry, Andhra Pradesh and other States. RACE received more than 200 papers, on the recent trends, and innovative approaches in both chemistry and environmental science, out of which 130 papers were selected.

K Duraivelu, dean (E&T), SRM University, welcomed the gathering. C Muthamizhchelvan, director (E&T), SRM University, presided over the function and spoke on recent advances in nanomaterial technology and its influence globally. During the conference, the organisers discusses plans to inaugurate E-Waste Collection Awareness Program (E-CAP) — a programme by TES-AMM (India), Yi of CII (Young Indians) and Industrial Waste Management Association (IWMA) and Pollution control board. **ENS**

# *News Article Published in Thinamani on 29th Nov, 2014 (Page 3 Chennai Edition)*



## மின் கழிவு சேகரிப்பு திட்டம்: 100 பள்ளிகளில் தொடக்கம்

**சென்னை, நவ.28:** மின் கழிவு சேகரிப்புத் திட்டம் இ-கேப் (E-CAP)சென்னையில் 100 பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது.

எஸ்ஆர்எம் பல்கலைக்கழக வேதியியல் துறை சார்பில் மின் கழிவு சேகரிப்பு குறித்து பள்ளி மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ),'யங் இந்தியன்ஸ்', தொழிற்சாலைக் கழிவு மேலாண்மை சங்கம் (ஐடபிள்யுஎம்ஏ), டிஇஎஸ்-ஏஎம்எம் நிறுவனம் ஆகியவை இணைந்து இந்த முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

மின் கழிவுகளில் மிகவும் நச்சுத் தன்மை கொண்ட பொருள்கள் இருப்பதாலும், அவை 90 சதவீதத்துக்கு மேல் சட்டத்துக்குப் புறம்பாக பல்வேறு இடங்களில் கொட்டப்படுவதாலும் பொது மக்களின் ஆரோக்கியத்துக்கு



சென்னை வடபழனி எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான மின் கழிவு சேகரிப்பு குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் (இடமிருந்து) தொழிற்சாலைக் கழிவு மேலாண்மைச் சங்கத்தின் தலைவர் எஸ்.மணி, 'யங் இந்தியன்ஸ்' அமைப்பின் தலைவர் தீபக் ராமசுவாமி, எஸ்ஆர்எம் பல்கலைக்கழக வேதியியல் துறை பேராசிரியை இந்திரா பிரியதர்ஷினி, 'டிஇஎஸ்-ஏஎம்எம்' நிறுவனத்தின் துணைத் தலைவர் டி.ரத்தினம்.

கேடு விளைவிக்கிறது. இதனால் வருங்கால தலைமுறையினரும் பாதிக்கப்படுவர். எனவே மின் கழிவுகளை சட்ட ரீதியாக பாதுகாப்பான முறையில் மறு சுழற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எஸ்ஆர்எம் பல்கலைக்கழகம், சிஐஐ, ஐடபிள்யுஎம்ஏ, டேன்ஃபோஸ் இந்தியா உள்ளிட்ட அமைப்புகள் ஒருங்கிணைந்து மின் கழிவு சேகரிப்புத் திட்டத்தை 100 பள்ளிகளில் தொடங்கியுள்ளன. இந்தத் திட்டம் இந்தியாவின் மின் கழிவு மேலாண்மையில் ஒரு முன்னோடியாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில் முன்னதாக www.e-cap.in என்ற வலைதளத்தை டேன்ஃபோஸ் இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் கமல்சிங் தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் ஐடபிள்யுஎம்ஏ அமைப்பின் தலைவர் எஸ்.மணி, டிஇஎஸ்-ஏஎம்எம் நிறுவனத்தின் தலைவர் டி.ரத்தினம், யங் இந்தியன்ஸ் அமைப்பின் நிர்வாகி தீபக் ராமசாமி, எஸ்ஆர்எம் பல்கலைக்கழக வேதியியல் துறைத் தலைவர் இந்திரா பிரியதர்ஷினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.